**செய்தி வெளியீடு எண் : 1212** **நாள் : 19.07.2022**

## PACL சொத்துக்கள் மோசடியாக பதிவு என்ற தலைப்பில் ஊடகங்களில் வெளிவந்த செய்தியின் மீது துறையின் பதிலறிக்கை

இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த Pearls Agrotech Corporation Ltd., (PACL) என்ற நிறுவனம் சட்ட விரோதமாக 5.46 கோடிக்கும் மேற்பட்ட பொதுமக்களிடமிருந்து 'கூட்டு முதலீட்டு திட்டம்' (collective investment scheme) மூலம் பொய்யான வாக்குறுதிகளின் அடிப்படையில் ரூ.45,184 கோடி முதலீடு பெற்று அந்த முதலீட்டுத் தொகைகள் மூலம் நாடு முழுவதும் பல மாநிலங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அதே நிறுவனத்தின் பெயரிலும் அறுநூறுக்கும் மேற்பட்ட அதன் சார்பு நிறுவனங்கள் பெயரிலும் கிரையம் பெற்றுள்ள நிலையில் முதலீட்டாளர்களுக்கு தொகையை திருப்பி தராமல் ஏமாற்றுவதாக அளிக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில் பல நபர்களால் பொது நல வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இதனை விசாரித்த உச்சநீதிமன்றம் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ஆர்.எம்.லோதா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்க SEBI (Securities and Exchange Board of India) – க்கு உத்தரவிட்டு அக்குழுவால் நடத்தப்படும் விசாரணையின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட தொடர்புடைய சொத்துகளை பொது ஏலமிட்டு அதில் கிடைக்கும் தொகையினை முதலீட்டாளர்களுக்கு பங்கிட்டு வழங்கிடுமாறு 02.02.2016-ல் ஆணையிட்டது. மேலும், நீதிபதி திரு. ஆர்.எம்.லோதா அவர்கள் தலைமையிலான குழுவின் முன்அனுமதியின்றி சம்பந்தப்பட்ட சொத்துகள் மீது எவ்வித பரிமாற்றமும் செய்யப்படக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடும் உச்சநீதிமன்றத்தின் ஆணையின் அடிப்படையில் தமிழ்நாட்டினைப் பொறுத்து PACL நிறுவனத்திற்கு உரிமையானதாக 8,198 ஆவணங்களில் பதியப்பட்டுள்ள சொத்துகள் குறித்த விவரங்கள் பெறப்பட்டு அவ்விவரங்கள் பதிவுத்துறையின் கள அலுவலர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக அவ்வப்போது அனுப்பப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில், மேற்குறிப்பிடும் உச்சநீதிமன்ற ஆணைகளை மறைத்தும் SEBI மற்றும் நீதிபதி ஆர்.எம்.லோதா குழுவின் முன் அனுமதி இன்றியும் நில அபகரிப்பாளர்களால் மோசடியான அல்லது அங்கீகாரமற்ற ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் மற்றும் புகார் மனுக்களின் விபரம் மத்திய புலனாய்வு அமைப்பினரால் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதன் அடிப்படையில் பதிவுத்துறையால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் பல நிகழ்வுகளில் SEBI மற்றும் நீதிபதி ஆர்.எம்.லோதா குழுவின் முத்திரைகள் மோசடியாக தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தமிழ்நாட்டின் 11 மாவட்டங்களில் பொது அதிகார ஆவணங்கள் மற்றும் கிரைய ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் 2018-ஆம் வருடம் பதிவுத்துறைக்கு முதன்முதலாக தெரிய வந்தது. ஆவணம் எழுதிக் கொடுத்தவர் மற்றும் எழுதி வாங்கியவர் இருவருமே மோசடிக்கு துணை போயுள்ளதாகவும் தெரிய வந்தது.

இந்நிலையில், பதிவுத்துறையால் அனைத்து அலுவலர்களுக்கும் PACL சொத்துக்கள் மோசடியாக பதிவு செய்வதினைத் தடுத்திட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த நெறிமுறைகள் 17.10.2018 தேதிய கடிதம், பதிவுத்துறை தலைவரின் சுற்றறிக்கை எண்.27150/சி3/2020, நாள்.24.12.2020 மற்றும் பதிவுத்துறை தலைவரின் சுற்றறிக்கை எண்.7842/சி1/2022, நாள்.05.03.2022 வாயிலாக பதிவு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன. அதன்படி,

1. SEBI மற்றும் லோதா குழுவின் முன் அனுமதி கடிதத்துடன் ஆவணம் ஏதும் பதிவிற்கு வந்தால் தொடர்புடைய முன் அனுமதி கடிதத்தின் உண்மைத் தன்மையினை உரிய அமைப்புகளிடமிருந்து சரிபார்த்து எழுத்து பூர்வமான கடிதம் பெற்ற பின்னரே ஆவணம் பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
2. மோசடியாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து உச்சநீதிமன்றத்தின் ஆணைகளுக்கு முரணாக நீதிபதி திரு. ஆர்.எம்.லோதா குழுவின் முன் அனுமதியின்றி பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தொடர் ஆவணப் பதிவிற்கு தடை உள்ளது எனவும் தொடர்புடைய நிலங்களின் வில்லங்கச்சான்றில் குறிப்பு மேற்கொள்ள ஆணையிடப்பட்டது.
3. மேலும், மோசடியாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளர்களால் பதிவு சட்டம் பிரிவு 68(2)-ன் கீழ் விசாரணை மேற்கொண்டு விரிவான ஆணை பிறப்பிக்குமாறும் அதன் விபரத்தினை அட்டவணை செய்யுமாறும் உச்சநீதிமன்ற ஆணைக்கு முரணாக செயல்பட்ட சம்பந்தப்பட்ட மோசடியாளர்கள் மற்றும் ஆவணத்தினைப் பதிவு செய்த பதிவு அலுவலர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்திட காவல் துறைக்கு தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை PACL மற்றும் அதன் சார்புடைய நிறுவனத்தாரின் சொத்து ஏறக்குறைய ஐம்பதாயிரம் ஏக்கராக உள்ளது. இச்சொத்துக்களில் 11 மாவட்டங்களிலுள்ள மொத்தம் 6892.02 ஏக்கர் நிலங்கள் 38 சார்பதிவாளர் அலுவலகங்களில், லோதா கமிட்டியின் அறிவுரைகளுக்கு எதிராக 714 ஆவணங்களின் மூலம் முறைகேடாக பதியப்பட்டுள்ளன. இந்த 714 ஆவணங்களிலும் “முறைகேடாக பதியப்பட்ட ஆவணம் / மோசடி ஆவணம்” என குறிப்புரை செய்யப்பட்டு தொடர்ந்து இச்சொத்தை விற்பதையும் வாங்குவதையும் தடை செய்யப்பட்டுள்ளது.

மொத்தம் 63 பதிவு அலுவலர்கள் இந்நேர்வு தொடர்பாக தவறிழைத்துள்ளனர் என கண்டறியப்பட்டு அவர்களில் 9 பதிவு அலுவலர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய 54 பதிவு அலுவலர்கள் மீது விதி 17(b)-ன் கீழ் குற்றக் குறிப்பாணை ஏற்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் நடந்த இது போன்ற பதிவு தவறுகளைக் கண்டுபிடித்து குற்றவியல் நடவடிக்கை எடுக்க பரிந்துரைப்பதற்காக சிறப்பு புலனாய்வு குழு இந்த அரசால் ஏற்படுத்தப்பட்டு அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது. இக்குழுவிற்கான தலைவர்

அரசால் நியமிக்கப்பட்டவுடன் கடந்த கால பதிவு தவறுகள் விடுதலின்றி கண்டறியப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த 05.03.2019 அன்று தனிப்பட்ட முறையில், தன்னிச்சையாக, தவறுதலான அறிவுரை வழங்கி மதுரை மாவட்டம், சாமநத்தம் கிராமத்தில் PACL நிலத்தைப் பதிவு செய்ய துணை நின்றதாக சொல்லப்படும் கூடுதல் பதிவுத் துறை தலைவர் மீது உரிய விசாரணை மேற்கொண்டு அறிக்கை செய்யுமாறு 01.04.2022 தேதிய அரசு கடிதத்தில் ஏற்கெனவே ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையிடம் கோரப்பட்டுள்ளது. அவ்வறிக்கை கிடைக்கப்பெற்றதும் அதன் அடிப்படையில் அவ்வலுவலர் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் PACL வாங்கியுள்ள அனைத்து சொத்துக்கள் குறித்த வில்லங்க விவரங்களிலும் “இச் சொத்து லோதா கமிட்டியின் முடிவுக்கு உட்பட்டது” எனவும் “இதனை விற்கவோ வாங்கவோ கூடாது” எனவும் குறிப்பு பதிவேற்றப்பட்டுள்ளது. இதையும் மீறி PACL சொத்துக்களை பதிவு செய்யும் அலுவலர்கள் மீது மிகக் கடுமையான ஒழுங்கு நடவடிக்கையும் குற்றவியல் நடவடிக்கையும் தொடரப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

**அரசு செயலாளர்**
**வணிகவரி மற்றும் பதிவுத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in